DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 284 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திரு. சீதன் ராஜ் |
| Father Name | தங்கராஜ் |
| Village | புளியங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 50 |

**<u>(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 23-03-2026.(நேரம்: 03.50PM )**

**( சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது)**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது புளியங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.
3.அசா 3 ஐ எனக்கு தெரியும்.
4.இவ்வழக்கின் 1,2,3 எதிரிகளை எனக்கு தெரியாது.
5.வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது.
6.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 4சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 4ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.03.2020 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு அசா 3 செல்வம் ரோட்டின் நடுவே செல்போன் பேசிக்கொண்டிருக்கும்போது இவ்வழக்கின் 1,2,3 எதிரிகள் அங்கு வந்து அசா 3 செல்வத்தை கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசி அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி காணொலி மூலம் சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.